# பல்கலைக்கழக அளவில் பட்டமளிப்பு விழா

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தேர்வு தரவரிசைப்பட்டியலில் (2015 – 2016 கல்வி ஆண்டு) காயல்பட்டணம் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி மாணவியர் 28 பேர் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் கணிதவியல் துறை மாணவி N. கதீஜா நுஸ்ரத் ஃபாஹிமா பகுதி I அரபி பாடத்தில் முதலிடம் பெற்று (Goldmedal) தங்கப்பதக்கத்தினையும், முதுகலை வணிகவியல் மாணவி S. ரம்ஜான் பாத்திமா முதுகலை துறையில் தங்கப்பதக்கமும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். மேலும் எம் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் இரா. அருணாஜோதி, கல்லூரி நூலகர் ஒய். மும்தாஜ் பேகம் ஆகிய இருவரும் முனைவர் பட்ட ஆய்வினை முடித்து அறிஞர் பட்டமும் (Ph.D) பெற்றனர். இவர்களுக்கான பதக்கங்களையும் பட்டத்தினையும் மேதகு தமிழக ஆளுநர் வித்யாசாகர்ராவ் அவர்கள் 28.12.16 புதன்கிழமை அன்று நடைபெற்ற மனோன்மணிய பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக வேந்தரும் மேதகு தமிழக ஆளுநருமான திரு.சி.எச். வித்யாசாகர்ராவ், பல்கலைக்கழக இணை வேந்தரும் மேதகு தமிழ்நாடு அரசு உயர்கல்வித்துறை அமைச்சருமான திரு.கே.பி. அன்பழகன் சிறப்பு விருந்தினர் புதுடெல்லி இந்தியத் தொழில்நுட்பக்கழக தகைசால் பேராசிரியர், பேரா. விக்ரம் குமார், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா.முனைவர்.சி. பாஸ்கர், மனோன்மணியம் சுந்தரனார்

பல்கலைக்கழக பதிவாளர் அ.ஜான்டி பிரிட்போ மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பல்கலைக்கழகத் தரவரிசையில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் பெற்ற மாணவியரையும் அறிஞர் பட்டம் பெற்ற பேராசிரியைகளையும் கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யது அப்துர் ரஹ்மான், செயலர் ஹாஜி வாவு W.M.M. மொகுதஸிம் BA (CS), துணைச்செயலர், ஹாஜி ஹாபீஸ் வாவு S.A.R. அஹமது இஸ்ஹாக் ஆலிம் M.A., Azhari (Egypt), கல்லூரி முதல்வர் ஜெ. எல்லோரா M.Com., M.Phil., Ph.D., இயக்குநர் திருமதி Dr. மெர்ஸி ஹென்றி M.A., Ph.D., பேராசிரியர்கள் மற்றும் மாணவியர் அனைவரும் பாராட்டினர்.